அழகான தமிழீழம் விரைவில் வந்து சேரும்
வருங்காலம் எமதாகும் வாழ்வு வெளிச்சமாகும்
இது தலைவன் வாழும் காலம் அல்லவா
கரும் புலிகள் செய்த வீரம் சொல்லவா 2
இது துணிவு கொண்ட தேசம் வரும் துயரை வென்று வாழும்
இங்கு பாடுகின்ற பூங்குயிலின் ஆசை நிறைவேறுமே

அழகான தமிழீழம் விரைவில் வந்து சேரும்
வருங்காலம் எமதாகும் வாழ்வு வெளிச்சமாகும்

வான் நிலவு மழையில் கரைந்தே விடுமா
சோகங்களால் மனசும் உடைந்தே விடுமா
வீரர்கள் தியாகங்கள் விடுதலை சேரவே
காலங்கள் தாண்டியும் தமிழினம் வாழவே
புதுப்புது மலர்களை போலவே
தினம் தினம் திகழ்ந்திட வேண்டுமே
கவலைகளை மறந்து எங்கள் கண்ணில் வீரம் வேண்டுமே

அழகான தமிழீழம் விரைவில் வந்து சேரும்
வருங்காலம் எமதாகும் வாழ்வு வெளிச்சமாகும்

ஆழ்கடலாய் அழுதால் ஆறுதல் வருமா
ஆடிபணிந்து வாழ்தல் தமிழின விதியா
ஆயலகடல் மீதிலே கடற்புலி படகுகள்
ஆடடா அவைகள் தான் விடியலின் கதவுகள்
உணர்வுகள் எரிமலை போலவே
நிமிருவோம் சுதந்திரம் காணவே
அனிமையே எமது வாழ்வு இனியும் இனியும் சேருமே

அழகான தமிழீழம் விரைவில் வந்து சேரும்
வருங்காலம் எமதாகும் வாழ்வு வெளிச்சமாகும்
இது தலைவன் வாழும் காலம் அல்லவா
கரும் புலிகள் செய்த வீரம் சொல்லவா 2
இது துணிவு கொண்ட தேசம் வரும் துயரை வென்று வாழும்
இங்கு பாடுகின்ற பூங்குயிலின் ஆசை நிறைவேறுமே

அழகான தமிழீழம் விரைவில் வந்து சேரும்
வருங்காலம் எமதாகும் வாழ்வு வெளிச்சமாகும்